**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**அசல் வழக்கு எண் – 79/2022**

**வாதி தரப்பு சாட்சி–1 சண்முகம் –** திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 07.04.2026ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

<u>3 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி:</u>

1) எனது தகப்பனார் பெயர் மாணிக்கம் ஆசாரி. அவர் 05.03.2002ல் இறந்துவிட்டார். எனது தாயார் பெயர் மாணிக்கம் அம்மாள். அவர் 2010ம் வருடம் இறந்தார். எனது பெற்றோருக்கு ஈஸ்வரி, அமிர்தம், சண்முகம் ஆகியோர் வாரிசுகள். அனைவருக்கும் திருமணமாகி விட்டது என்றால் சரிதான். எனது தகப்பனார் தனது வாரிசுகளுக்கு சொத்துக்களை பதிவு ஆவணம் மூலம் பாகம் பிரித்துக் கொடுத்தாரா என்றால் இல்லை. எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் அவரது வாரிசுகள் அனைவருக்கும் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். எனது தகப்பனாரின் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். எனது தகப்பனார் மாணிக்கம் ஆசாரியின் தகப்பனார் பெயர் ஆறுமுகம் ஆசாரி. நான், எனது சகோதரிகள் ஈஸ்வரி, அமிர்தம் ஆகியோர் ஒரே ஊரில் வசிக்கிறோமா என்றால் ஆமாம், வேலாயுதம்பாளையத்தில்வசிக்கிறோம்.

2) எனது தகப்பனாருக்கு வெள்ளப்பட்டி கிராமத்தில் எத்தனை ஏக்கர் சொத்துக்கள் உள்ளது என்றால் 2 ஏக்கர் உள்ளது. மேற்படி 2 ஏக்கர் சொத்துக்கள் எனது தகப்பனாருக்கு எவ்வாறு பாத்தியம் என்றால் பூர்வீக சொத்துக்கள். பூர்வீக சொத்துக்களாக உள்ளது என்றால் எனது சகோதர, சகோதரிகளுக்கும் பாத்தியம் உண்டு என்றால் சரிதான். தாவா சர்வே எண் 128/1G என்பது, சர்வே எண் 128/1லிருந்து உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். வழக்குரையில் சர்வே எண் 128/1G என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எந்த வருடம் சர்வே எண் 128/1G உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் அதுபற்றி தெரியாது. வா.சா.ஆ.3 ஆவணத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

3) மேற்படி ஆவணத்தை யார், யாருக்கு எழுதியது என்றால் எனது தகப்பனார், வீரப்ப கவுண்டர் என்பவருக்கு எழுதிக் கொடுத்தது. வா.சா.ஆ.3 ஆவணத்தில் எத்தனை வருட காலக்கெடு போடப்பட்டுள்ளது என்றால் 1 வருடம் போடப்பட்டுள்ளது.

வா.சா.ஆ.3 ஆவணத்திற்கு எப்போது செல்லு ரசீது போடப்பட்டது என்றால், செல்லு ரசீது போடப்படவில்லை. எதன் அடிப்படையில் ரசீது போடப்படவில்லை என கூறுகிறேன் என்றால், வில்லங்க சான்றின் அடிப்படையில் கூறுகிறேன். எனது தகப்பனார் கையெழுத்து போடுவது வழக்கம். நான் 21.06.1969 ல் பிறந்தேன். தற்போது எனக்கு 56 வயது ஆகிறது. எனது தகப்பனாரின் கையெழுத்தை பார்த்திருக்கிறேனா என்றால் பார்த்திருக்கிறேன். எனது தகப்பனார் கையெழுத்திட்ட ஆவணம் ஏதாவது வைத்திருக்கிறேனா என்றால், வா.சா.ஆ.3 ன் நகல் வைத்திருக்கிறேன். வா.சா.ஆ.3 ஆவணத்தின் அடியில் கண்டுள்ள ஆ.மாணிக்கம் ஆசாரி என்ற கையெழுத்து எனது தகப்பனாருடையது. வா.சா.ஆ.6 ல் பட்டா எண் 170 ல் எனது பெயர் இடம்பெறவில்லை என்றால் சரிதான்.

4) வா.சா.ஆ.6 வழக்கு சொத்துக்குரியது என்றால் சரிதான், அது போலியான பட்டா. வா.சா.ஆ.6 போலியான மூல ஆவணங்களின் அடிப்படையில் வருவாய்துறையால் கொடுக்கப்பட்டது. பட்டா போலியானது என்பதைப் பொறுத்து வருவாய்துறையில்தான் தீர்வு காண வேண்டும் என்றால் சரிதான். வருவாய்துறையில் பட்டா போலியானது என மனு கொடுத்தேனா என்றால், தோகைமலை காவல்நிலையம் மூலம் கடவூர் வட்டாட்சியருக்கு 14.06.2022 ல் மனு கொடுத்தேன். வா.சா.ஆ.6 எந்த வருடம் ஏற்பட்டது என்றால், 20.07.2021 ம் தேதி ஏற்பட்டது. எதன் அடிப்படையில் மேற்படி தேதியை சொல்கிறேன் என்றால், வா.சா.ஆ.6 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. 20.07.2021 ம் தேதிக்கு முன்பு பட்டா எண் 170 யார் பெயரில் இருந்தது என்றால் ஆறுமுகம் ஆசாரி மகன் மாணிக்கம் ஆசாரி பெயரில் இருந்தது. எனது தகப்பனார் மாணிக்கம் ஆசாரி பெயரில் இருந்த பட்டாவை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அது என்வசம் உள்ளதா என்றால் இல்லை. அ பதிவேடு மற்றும் SLR உள்ளது.

(வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**